முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2021 சனவரி

## (101) நிதிக் கணக்கீடு

(Financial Accounting)

2021-03-13
காலை
[9.00 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)**:**
  - (1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*
  - (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  - (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*
  - (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  - (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  - (6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  - (7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *இலிருந்து* ***1.10*** *வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் கணக்கீட்டுச் செயன்முறையின் கணக்கீட்டு உள்ளீடாக அமைவது எது?

(1) கொள்வனவு நாளேடு
(2) நிதி நிலைக் கூற்று
(3) கொடுக்கல் வாங்கல்கள்
(4) காசுப் பாய்வுக் கூற்று

**1.2** பின்வருவனவற்றுள் வியாபாரமொன்றின் அக்கறையுடைய தரப்பினராக (நாட்டதாரர்) அமைபவர் யார்?

(1) ஊழியர்கள்
(2) முகாமையாளர்கள்
(3) அரசாங்கம்
(4) மேற்கூறிய யாவரும்.

**1.3** “தொக்குகளானவை கிரயம் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதியில் (NRV) குறைந்த பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன”.

மேற்கூறிய கூற்றுடன் தொடர்புடைய கணக்கீட்டுச் சமன்பாடாக அமைவது :

(1) முன்னெச்சரிக்கை எண்ணக்கரு (Prudence Concept)

(2) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு (Going Concern Concept)

(3) உரிம எண்ணக்கரு (Entity Concept)

(4) அட்டுறு எண்ணக்கரு (Accrual Concept)

**1.4** கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக உரிமம் ஒன்றினால் கட்டுப்படுத்தப்படும் ஒரு நிகழ்காலப் பொருளாதார வளம் எவ்வாறு கருதப்படுகிறது :

(1) ஒரு சொத்து (2) ஒரு பொறுப்பு (3) ஓர் உரிமையாண்மை (4) ஒரு வருமானம்

**1.5** சொத்துக்களில் அதிகரிப்பை ஏற்படுத்தும் ஊடுசெயலொன்றாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

(1) மீள்விற்பனைக்காக ரூபா 100,000/- பெறுமதியான பொருட்களை காசிற்குக் கொள்வனவு செய்தல்

(2) ரூபா 50,000/- மின்சாரக் கட்டணம் செலுத்தியமை.

(3) அலுவலகப் பாவனைக்காக ரூபா 100,000/- பெறுமதியான கணினியை கடன் அடிப்படையில் கொள்வனவு செய்தல்

(4) வியாபாரத்தின் உரிமையாளர் ரூபா 100,000/- கிரயமான பொருட்களைத் தனது தனிப்பட்ட பாவனைக்காக எடுத்துக் கொண்டமை.

**1.6** “ஒரு நிறுவனமானது நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து இயங்கும் என்ற எடுகோளின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.”

மேற்கூறிய கூற்றினை விளக்கும் மிகப் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவாக அமைவது :

(1) கால எண்ணக்கரு (Periodic Concept) (2) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

(3) அட்டுறு எண்ணக்கரு (4) உரிம எண்ணக்கரு

**1.7** 2021 சனவரி மாதத்திற்கான வியாபாரக் கடன்பட்டோர் தொடர்பில் **ABC டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு :

| | ரூபா |
|---|---|
| 2021 சனவரி 01 இல் வியாபாரக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | 200,000 |
| 2021 சனவரி 31 இல் வியாபாரக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | 225,000 |
| 2021 சனவரி மாதத்தில் கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட காசு | 350,000 |
| 2021 சனவரி மாதத்திற்கான உட்திரும்பல் நாட்குறிப்பேட்டு மொத்தம் | 25,000 |

மேற்கூறிய தகவல்களின் அடிப்படையில், 2021 சனவரி மாதத்திற்கான மொத்த விற்பனையாக அமைவது :

(1) ரூபா 400,000/- (2) ரூபா 375,000/- (3) ரூபா 350,000/- (4) ரூபா 450,000/-

**1.8** **ஷீனா டிரேடர்ஸ்** ஆனது ரூபா 2,000,000/- பெறுமதியான மோட்டார் வாகனத்தை 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி கொள்வனவு செய்தது. வியாபாரத்தின் கொள்கையானது மோட்டார் வாகனங்களை குறைந்து செல்லும் மீதி முறையில் பெறுமானத் தேய்வு செய்வதாகும். ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு வீதம் 20 % எனில், 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பெறுமானத் தேய்வாக அமைவது :

(1) ரூபா 400,000/- (2) ரூபா 320,000/- (3) ரூபா 800,000/- (4) ரூபா 720,000/-

**1.9** **XYZ வங்கியிடமிருந்து** வங்கிக் கடனைப் பெற்றுக் கொண்டமையால் கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது ஏற்படும் சரியான தாக்கத்தைக் காட்டுவது :

(1) சொத்துக்களில் அதிகரிப்பு மற்றும் உரிமையாண்மையில் அதிகரிப்பு

(2) சொத்துக்களில் அதிகரிப்பு மற்றும் பரிப்புக்களில் அதிகரிப்பு

(3) சொத்துக்களில் குறைவு மற்றும் பரிப்புக்களில் குறைவு

(4) உரிமையாண்மையில் குறைவு மற்றும் பரிப்புக்களில் அதிகரிப்பு

**1.10** தனியுடமை வியாபாரத்தின் உரிமையாளரான **ரணசிங்க** என்பவர் தனது வியாபாரத்திற்கு தனது தனிப்பட்ட மோட்டார் வாகனத்தை மாற்றிக் கொண்டார்.

இந்த ஊடுசெயலைப் பதிவு செய்வதற்கான சரியான இரட்டைப் பதிவு :

(1) காசுக் கணக்கு வரவு மற்றும் மூலதனக் கணக்கு செலவு

(2) மோட்டார் வாகனக் கணக்கு வரவு மற்றும் காசுக் கணக்கு செலவு

(3) மோட்டார் வாகனக் கணக்கு வரவு மற்றும் மூலதனக் கணக்கு செலவு

(4) மூலதனக் கணக்கு வரவு மற்றும் மோட்டார் வாகனக் கணக்கு செலவு

*கீழே **1.11** தொடக்கம் **1.15** வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் குறிப்பிடுக.*

**1.11** ACCPAC, MYOB மற்றும் SAGE ஆகியன பொது (தேவைக்குப் பொருத்தமான) கணக்கீட்டு மென்பொருளிற்கான உதாரணங்களாகும்.

**1.12** தரப்பட்ட காலப்பகுதி ஒன்றின் முடிவில் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் தென்படும் மீதி எப்போதும் ஒரு வரவு மீதியாக இருக்கும்.

**1.13** தனியுடமை வியாபாரம் ஒன்றின் உரிமையாளரால் ஈடுபடுத்தப்படும் மேலதிக மூலதனமானது வியாபாரக் காலப்பகுதிக்கான இலாபம் / நட்டத்தைப் பாதிக்கின்றது.

**1.14** கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்படும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும்.

**1.15** செலவுத் தாளானது (credit note) வியாபார உரிமம் ஒன்றின் மூல ஆவணம் ஒன்றிற்கான உதாரணமாகும்.

*1.16 தொடக்கம் 1.20 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.16** வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிப்பதற்கான காரணங்கள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

**1.17** கணக்கீட்டின் நோக்கங்கள் இரண்டினைப் (02) பட்டியலிடுக.

**1.18** தனியுடமையாளரான **ஜயவீர வணிகத்தின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் கீழ்வருமாறு :

| | ரூபா |
|---|---|
| 2019 ஏப்ரல் 01 இல் மூலதனம் | 500,000 |
| 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் எடுப்பனவுகள் | 100,000 |
| 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் | 200,000 |
| 2020 மார்ச் 31 இல் பரிப்புக்கள் | 150,000 |

மேற்கூறிய தகவல்களின் அடிப்படையில் 2020 மார்ச் 31 இல் மொத்தச் சொத்துக்களை கணிக்குக.

**1.19** நிதித் தகவல்களின் வரையறைகள் (limitations) இரண்டினை (02) குறிப்பிடுக.

**1.20** **பெரேராவின் வணிகத்தில்** 2021 சனவரி மாதத்தில் இடம்பெற்ற கடன் விற்பனை தொடர்பான ஊடுசெயல்கள் கீழ்வருமாறு :

| திகதி | பட்டியல் இல. | வாடிக்கையாளரின் பெயர் | விபரம் | கணியம் | அலகிற்கான விலை | வியாபாரக் கழிவு |
|---|---|---|---|---|---|---|
| 05.01.2021 | 101 | **ABC லிமிட்டெட்** | மேற்சட்டைகள் | 10 | 800 | - |
| 25.01.2021 | 102 | **XYZ டிரேடர்ஸ்** | சட்டைகள் | 08 | 1,200 | 10% |

மேற்கூறிய தகவல்களின் அடிப்படையில், 2021 சனவரி மாத இறுதியில் விற்பனைக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டிய தொகையைக் கணிக்குக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

**சந்துன்** என்பவர் **ரஜரட்ட ஸ்ரோர்ஸின்** கணக்கு அலுவலர் ஆவார். 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தபோது பரீட்சை மீதியானது இணங்காதிருந்ததுடன் அதன் வித்தியாசமான ரூபா 334,000/- தொங்கல் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டது.

எவ்வாறாயினும், பின்னர் கீழ்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன :

(1) வியாபாரக் கடன்கொடுத்தோர் ஒருவரிடமிருந்து மீள்விற்பனை நோக்கில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 75,000/- பெறுமதியான பொருட்கள் தவறுதலாக வியாபாரக் கடன்கொடுத்தோர் கணக்கு மற்றும் கொள்வனவுக் கணக்கு ஆகிய இரண்டிலும் இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டன.

(2) ரூபா 125,000/- பெறுமதியான அலுவலக உபகரணக் கொள்வனவானது அலுவலகப் பராமரிப்பு செலவினக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டது. ஆயினும், அது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டது.

(3) கட்டட உரிமையாளருக்கு 2020 மார்ச் மாதத்திற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 76,500/- வாடகையானது காசேட்டில் சரியாகச் செலவுப் பதிவு செய்யப்பட்டது. ஆயினும் உரிய வரவுப் பதிவானது உரிய பேரேட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

(4) 2020 மார்ச் மாதத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 475,000/- சம்பளமானது சம்பளக் கணக்கில் ரூபா 47,500/- ஆகப் பதிவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(5) ரூபா 100,000/- காசு விற்பனையானது விற்பனைக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை. ஆயினும் இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(6) நிலையான வைப்பின் மீது பெறப்பட்ட ரூபா 35,000/- வட்டி வருமானமானது, தவறுதலாக வட்டி செலவினக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டது. ஆயினும் இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

***நீங்கள் செய்யவேண்டியவை :***

(a) மேற்கூறிய வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் **தயாரிக்குக.**
(06 புள்ளிகள்)

(b) தொங்கல் கணக்கைத் ***தயாரிக்குக.*** (04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

***சாம்*** என்பவர் ரூபா 580,000/- ஆரம்ப மூலதனத்தைக் காசாக முதலீடு செய்து **சாம் டிரேடர்ஸ்** என்ற தனியுடமை வியாபாரத்தை 2020 ஏப்ரல் 01 இல் ஆரம்பித்தார்.

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2020 ஏப்ரல் 30 இல் முடிவடைந்த மாதத்திற்கான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) கீழ்வருமாறு :

| | **ரூபா** | | **ரூபா** |
|---|---|---|---|
| ஆரம்ப மூலதன முதலீடு | 580,000 | சம்பளங்களும் கூலிகளும் | 1,375,000 |
| மேலதிக மூலதன முதலீடு | 1,200,000 | வாடகை | 125,000 |
| காசு விற்பனை | 5,500,000 | வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 2,250,000 |
| வியாபாரக் கடன்பட்டோரிடம் இருந்தான பெறுவனவுகள் | 1,900,000 | மோட்டார் லொறி ஒன்றின் கொள்வனவு (2020 ஏப்ரல் 01 இல் கொள்வனவு செய்யப்பட்டது) | 2,400,000 |
| | | காசுக் கொள்வனவுகள் | 2,000,000 |
| | | மின்சாரம் | 45,000 |
| | | மீதி கொ./செ. | 985,000 |
| | **9,180,000** | | **9,180,000** |

(2) 2020 ஏப்ரல் 30 இல் கணக்கேடுகளில் பின்வரும் மீதிகள் காணப்பட்டன :

| | ரூபா |
|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் | 1,400,000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 2,100,000 |
| அட்டுறு சம்பளம் | 25,000 |

(3) மோட்டார் லொறியானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு 20% இல் பெறுமானத் தேய்விடப்படுகிறது.

(4) 2020 ஏப்ரல் 30 இல் எவ்வித இருப்புகளும் காணப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2020 ஏப்ரல் 30 இல் **சாம் டிரேடர்ஸின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 04

**ராமநாயக்க செரமிக்** என்பது செரமிக் பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர் ஒருவராகும். **ராமநாயக்கா செரமிக்** இன் ஏடுகளிலிருந்து 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| விபரம் | ரூபா |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு | 2,100,000 |
| 2019 ஏப்ரல் 01 இல் மூலப்பொருள் தொக்கு | 650,000 |
| 2019 ஏப்ரல் 01 இல் புத்துருவாகும் வேலைகள் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 910,000 |
| உட்காவுகைக் கூலி – மூலப்பொருள் | 330,000 |
| நேர் கூலிகள் | 1,650,000 |
| மின்சாரம் | 400,000 |
| தொழிற்சாலை மின்பிறப்பாக்கிக்கான எரிபொருள் | 125,000 |
| மோட்டார் லொறி மீதான பெறுமானத் தேய்வு | 250,000 |
| கட்டடம் மீதான பெறுமானத் தேய்வு | 160,000 |
| தொழிற்சாலைக் கட்டடத்திற்கான காப்புறுதி | 270,000 |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2020 மார்ச் 31 இல் மதிப்பிடப்பட்ட இறுதித் தொக்குகள் கீழ்வருமாறு :

| விபரம் | கிரயம் (ரூபா) |
|---|---|
| மூலப்பொருள் | 700,000 |
| புத்துருவாகும் வேலை (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 440,000 |

(2) வணிகத்தின் கொள்கையானது பெறுமானத் தேய்வை கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் பின்வரும் வீதங்களில் மேற்கொள்வதாகும் :

| | **வீதம்** |
|---|---|
| கட்டடம் | 10% |
| மோட்டார் லொறி | 25% |

(3) கீழ்வரும் செலவினங்கள் பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் :

| | **தொழிற்சாலை** | **அலுவலகம்** |
|---|---|---|
| மின்சாரம் | 80% | 20% |
| கட்டடம் மீதான பெறுமானத் தேய்வு | 80% | 20% |
| மோட்டார் லொறி மீதான பெறுமானத் தேய்வு | 90% | 10% |

(4) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், கிரயத்தில் 10% இலாபம் வைத்து வியாபாரப் பிரிவுக்கு மாற்றப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ராமநாயக்கா செரமிக்ஸ்** இன் உற்பத்திக் கணக்கைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 05

(A) தனியுடமை வியாபாரமான **ராஜா ஸ்ரோர்ஸின்** வியாபாரத்தில் 2021 சனவரி மாதத்தில் இடம்பெற்ற ஊடுசெயல்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| **திகதி** | **ஊடுசெயல்** |
|---|---|
| 01.01.2021 | **ராஜா** மூலதனமாக ரூபா 2,000,000/- இனை காசாக முதலீடு செய்து வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார். |
| 05.01.2021 | மீள்விற்பனைக்காக ரூபா 750,000/- பெறுமதியான பொருட்கள் கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 10.01.2021 | ரூபா 500,000/- கிரயமான இருப்புகள் ரூபா 650,000/- க்கு கடனடிப்படையில் விற்பனை செய்யப்பட்டன. |
| 15.01.2021 | வியாபாரக் கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து ரூபா 400,000/- பெறப்பட்டது. |
| 25.01.2021 | 2021 சனவரி மாதத்திற்கான ஊழியர் சம்பளமாக ரூபா 300,000/- செலுத்தப்பட்டது. |
| 31.01.2021 | **ராஜா** ரூபா 25,000/- கிரயமான பொருட்களைத் தனது தனிப்பட்ட பாவனைக்காக எடுத்துக் கொண்டார். |

**நீங்கள் செய்யவேண்டியது :**

மேற்கூறிய ஊடுசெயல்களின் தாக்கத்தைப் பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் **பதிவு செய்க.**

*[தொக்கு + வியாபாரக் கடன்பட்டோர் + காசு = உரிமையாண்மை + பரிப்புக்கள்]*

(06 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** 2021 சனவரி 31 இலான வங்கிக் கூற்றானது ரூபா 243,000/- சாதகமான மீதியைக் காட்டிய அதே வேளை **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கானது வரவு (சாதகமான) மீதியான ரூபா 175,000/- இனைக் காட்டியது.

வேறுபாட்டிற்கான காரணங்கள் பின்வருமாறு :

(1) வங்கியானது ரூபா 5,000/- இனை வங்கிக் கட்டணமாக கழித்திருந்தது. ஆயினும் இது காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

(2) நிலையான வைப்பிலிருந்து கிடைத்த ரூபா 98,000/- வட்டியானது வங்கிக்கு வட்டி வருமானமாக நேரடியாக் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஆயினும் இது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(3) ரூபா 125,000/- பெறுமதியான காசோலையானது **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியினால்** 2021 சனவரி 29 ஆந் திகதி வழங்கப்பட்டது. ஆயினும் இது 2021 சனவரி 31 வரை வங்கிக்குக் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(4) வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 150,000/- பெறுமதியான காசோலையானது 2021 சனவரி 31 இலும் இன்னும் தேறியிருக்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக:**

(a) சீராக்கம் செய்யப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு)

(02 புள்ளிகள்)

(b) 2021 சனவரி 31 இலான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

## <u>பகுதி C</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

***சஹானா டிரேடர்ஸ்*** என்பது ***சஹானுக்குச்*** சொந்தமான ஒரு தனியுடமை வியாபாரமாகும். ***சஹானா டிரேடர்ஸின்*** 2020 மார்ச் 31 இலான பரீட்சை மீதி கீழ்வருமாறு :

***சஹானா டிரேடர்ஸ்***

**2020 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்: | | |
| காணி | 2,000 | |
| கட்டடம் | 4,750 | |
| மோட்டார் வாகனங்கள் | 2,500 | |
| அலுவலக உபகரணம் | 1,700 | |
| 2019 ஏப்ரல் 01 இல் திரள் பெறுமானத் தேய்வு: | | |
| கட்டடம் | | 1,250 |
| மோட்டார் வாகனங்கள் | | 520 |
| அலுவலக உபகரணம் | | 350 |
| விற்பனைகள் | | 48,000 |
| கொள்வனவுகள் | 27,170 | |
| 2019 ஏப்ரல் 01 இல் தொக்கு | 2,900 | |
| 2019 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்கு | | 9,000 |
| நிலையான வைப்பு (2019 அக்டோபர் 01 இல் முதலீடு செய்யப்பட்டது) | 1,500 | |
| வியாபார வருமதிகள் | 4,100 | |
| வியாபார சென்மதிகள் | | 1,895 |
| மின்சாரம் | 1,200 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 6,200 | |
| போக்குவரத்துச் செலவுகள் | 500 | |
| நீர் | 190 | |
| வங்கிக் கட்டணங்கள் | 25 | |
| காட்சியறைக்கான வாடகை | 1,100 | |
| நிலையான வைப்பு மீதான வட்டி வருமானம் | | 50 |
| கையிலுள்ள காசும் வங்கி மீதியும் | 5,230 | |
| | **61,065** | **61,065** |

பின்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2020 மார்ச் 31 இல் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதித் தொக்கின் பெறுமதி ரூபா 3,500,000/- ஆகும்.

(2) வியாபாரத்தின் கொள்கையானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் பின்வரும் வீதங்களில் பெறுமானத் தேய்வு செய்வதாகும் :

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | ஆண்டிற்கு 10 % |
| மோட்டார் வாகனங்கள் | : | ஆண்டிற்கு 25 % |
| அலுவலக உபகரணம் | : | ஆண்டிற்கு 10 % |

(3) நிலையான வைப்பிற்கான ஆண்டு வட்டி வீதம் 8 % ஆக இருப்பதுடன் 2020 மார்ச் மாதத்திற்கான வட்டி வருமானமானது **சஹானா டிரேடர்ஸின்** கணக்கேடுகளில் இன்னும் கணக்கிற் கொள்ளப்பட வில்லை.

(4) கணக்கேடுகளில் பதிவு செய்யப்படாத 2020 மார்ச் மாதத்திற்காகச் செலுத்த வேண்டிய பட்டியல்கள் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| மின்சாரம் | : | ரூபா 75, 000/- |
| நீர் | : | ரூபா 21, 000/- |

(5) **சஹானா டிரேடர்ஸ்** 2019 ஏப்ரல் 01 இல் காட்சியறைக்கான வாடகை உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டதுடன் காட்சியறைக்கான மாத வாடகை ரூபா 100,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (11 புள்ளிகள்)

(b) 2020 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |